
Saint Cunegunda

## *புனித குனகுந்தா (-1039)*

இவளுக்கு பக்தியில் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டது. இவள் பவேரியா நாட்டின் கோமானான புனித ஹென்றி என்பவரை மணந்தாள். இவளும் கணவனும் விரத்தராக வாழ்ந்தனர். இவளது பேர் கீர்த்தியைக் கெடுக்க கெட்ட மனிதர் பலர் ஒன்று சேர்ந்து இவளைப் பற்றிய அபாண்டங்களைக் கூறினார்கள். என்றாலும் கடவுள் இவளைக் கைவிடவில்லை. புதுமை செய்து இவளது பெயரைக் காப்பாற்றினார். எரிகிற இரும்புத் துண்டுகள் மீது இவள் நடந்து தான் மாசற்றவள் என்று காண்பித்தாள். நெருப்பு இவளுக்கு எவ்விதத் தீங்கும் செய்ய வில்லை. இதைக் கண்ட இவளுடைய கணவரான பேரரசர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இவளுடைய கணவர் 1024ம் ஆண்டு இறந்தார். இவள் தனது சொத்துக்கள் அனைத்தையும் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டாள். இவள் கட்டியிருந்த மடத்திலே ஓர் துறவியாகச் சேர்ந்தாள். பக்தி நூல்களைப் படித்து நெடுநேரம் செபிப்பாள். கடின உழைப்பாளி.

**சிந்தனை:**

மாசற்றவர்களை கடவுள் ஒரு போதும் கைவிடமாட்டார்.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் மாசற்றவர்களாக வாழ உதவி செய்தருளும்.